திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**குளித்தலையில் கரும்பு அறுவடை தின விழா**

First Published : 30 Apr 2010 12:58:23 AM IST

குளித்தலை, ஏப். 29: கரூர் மாவட்டம், குளித்தலையில் கரும்புப் பயிர் அறுவடை தின விழா அண்மையில் நடைபெற்றது.

குளித்தலை அருகேயுள்ள கருங்கலாப்பள்ளி கிராமத்தில் 2008-09 ஆம் ஆண்டில் உழவன் துல்லிய பண்ணையத் திட்டம் என்ற திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி 20 விவசாயிகளால் 20 ஹெக்டேர் நிலத்தில் பல்வேறு பயிர்கள் பயிரிடப்பட்டன.

தண்ணீர்பள்ளி வேளாண்மைத் துறையின் அறிவுரைகளின்படி சொட்டுநீர்ப் பாசனம், நீரில் கரையும் உரங்கள் இந்தப் பயிர்களுக்கு பயன்படுத்தப்பட்டன. இதில், அய்யர்மலை பகுதியைச் சேர்ந்த விவசாயி கருப்பண்ணன் 1 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிட்டிருந்த கரும்பு, வெட்டும் பருவத்தை அடைந்தது.

துல்லிய பண்ணையத் திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்ட பயிரின் முதல் அறுவடை ஆட்சியர் ஜெ. உமா மகேஸ்வரி முன்னிலையில் அண்மையில் நடைபெற்றது. அப்போது ஆட்சியர் கூறியது:

துல்லிய பண்ணைத் திட்டம் மூலம் கரும்பு சாகுபடி செய்வதால் விவசாயிகள் அதிக லாபத்தை பெறலாம். தற்போது ஏக்கருக்கு 77 மெகா டன் மகசூல் எடுக்கப்பட்டுள்ளது.

இது சாதாரண முறையில் பயிரிடுவதைக் காட்டிலும் அதிகமானதாகும்.

வேளாண்மைத் துறை மூலமாக கரூர் மாவட்டத்தில் 560 ஹெக்டர் பரப்பளவில் துல்லிய பண்ணையத் திட்டத்தின் கீழ் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது.

குளித்தலை வட்டத்தில் 150 ஹெக்டர் பரப்பளவில் கரும்பு சாகுபடி நடைபெறுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் கரும்பு சாகுபடி செய்யும் போது அதிகமான லாபமும், வேளாண்மைத் துறை மூலமாக மானியமும் கிடைக்கிறது.

எனவே, விவசாயிகள் இந்தத் திட்டத்தின் கீழ் பயிர் சாகுபடி செய்யலாம் என்றார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கே. ஜெகதீசன், குளித்தலை வேளாண்மை உதவி இயக்குநர் கே. சேகர், தோட்டக்கலைத் துறை, தரக்கட்டுப்பாடுத் துறை, பேட்டவாய்த்தலை ஈஐடி பாரி நிறுவனத்தினர், கோவை பினோலெக்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

**தனிக் கடைகள் அமைத்து தீவனம் வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்**

First Published : 30 Apr 2010 02:49:05 AM IST

கிருஷ்ணகிரி, ஏப்.29: ஆவின் நிறுவனத்துக்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களுக்கு தனிக் கடைகள் அமைத்து தீவனம் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், ஆட்சியர் வே.க.சண்முகம் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இந்த கோரிக்கையை முன் வைத்தனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிராமப் பகுதிகளில் தினமும் இரண்டரை மணி நேரமே மின்சாரம் வழங்கப்படுகிறது. மின் விநியோகம் உள்ள நேரத்தில் மின்வாரிய ஊழியர்கள் பராமரிப்புப் பணியில் ஈடுபடுகின்றனர். இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர் என விவசாயி லோகாபிராம் புகார் கூறினார்.

பேரிகையைச் சேர்ந்த விவசாயி வெங்கடாசலம் பேசும்போது, கிராம பகுதிகளில் அயோடின் சத்து குறித்து போதிய விழிப்புணர்வு இல்லை. பள்ளி மாணவர்களில் 10 சதவீதம் பேர் மட்டுமே அயோடின் சத்து உப்பை

பயன்படுத்துகின்றனர். அத்திமுகம், பேரிகை போன்ற கிராமங்களில் அயோடின் சத்து இல்லாத உப்பையே விற்பனை செய்கின்றனர். சுகாதார அலுவலர்கள் இதுகுறித்து கடைகளில் சோதனை செய்ய வேண்டும் என்றார்.

கூட்டுறவு பால் சங்கங்களில் பால் ஸ்கேன் இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பால் உற்பத்தியாளர்களுக்கு பால் கறவை இயந்திரங்கள் வழங்க வேண்டும் என விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவர் ராமகவுண்டர் கூறினார்.

காற்று மழையால் பாதிக்கப்பட்ட மா விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும். வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு, தென்னை பயிர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும என விவசாயிகள் வலியுறுத்தினர்.

முன்னதாக எண்ணேகொல்புதூரில் தடுப்பணை கட்டுதல், கிருஷ்ணகிரி அணையின் இடது கால்வாய் நீட்டிப்புப் பணியை மேற்கொள்ளுதல், பால் விற்பனைப் பணத்தை அப்படியே பால் உற்பத்தியாளர்களுக்கு பட்டுவாடா செய்ய ஆணை பிறப்பித்த அரசுக்கும், முதல்வருக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் நன்றி தெரிவித்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வேளாண் பல்கலை. பூச்சியியல் துறை பேராசிரியருக்கு விருது**

First Published : 30 Apr 2010 06:53:56 AM IST

கோவை, ஏப்.29:வேளாண் பல்கலைக்கழகத்தின் பூச்சியியல் துறை பேராசிரியர் கு.ராமராஜ்}க்கு சர்வதேச அக்ராலாஜி பத்திரிகையின் சிறப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் ஆக்சான் நகரில் உள்ள டெய்லர் மற்றும் பிரான்சிஸ் நிறுவனம், இந்த பத்திரிகையை வெளியிடுகிறது.

மேற்குவங்க வேளாண் பல்கலை.யில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில், இந்த சிறப்பு விருது வழங்கப்பட்டது.

பயிர்களைத் தாக்கும் சிலந்திகள் மற்றும் அவற்றின் கட்டுப்பாடு குறித்த ஆராய்ச்சிக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 75 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். ரூ.2 கோடி மதிப்பிலான பல்வேறு ஆராய்ச்சித் திட்டங்களில் முதன்மை ஆராச்சியாளராகப் பணியாற்றியுள்ளார்.

**தென்னை விவசாயிகளுக்கு ரூ.1.35 லட்சம் பராமரிப்பு மானியம்: ஆட்சியர் வழங்கினார்**

First Published : 30 Apr 2010 04:40:50 AM IST

ராமநாதபுரம், ஏப். 29: ராமநாதபுரம் அருகே திருப்புல்லாணி வட்டார பயனாளிகளுக்கு ரூ.1.35 லட்சத்துக்கான பராமரிப்பு மானியத்தை மாவட்ட ஆட்சியர் த.ந.ஹரிஹரன் வியாழக்கிழமை நடந்த விழாவில் வழங்கினார்.

விழாவுக்கு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ந.சத்தியமூர்த்தி தலைமை வகித்தார். துணை இயக்குநர் சக்திமோகன், உதவி இயக்குநர் கமாலுதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஆட்சியர் த.ந.ஹரிஹரன் திருப்புல்லாணி வட்டாரத்தை சேர்ந்த 9 பயனாளிகளுக்கு தென்னை பராமரிப்பு ஊக்கத் தொகையாக தலா ரூ.17,500 வீதம் மொத்தம் ரூ.1,35,500-ஐ வழங்கினார்.

இதில் அவர் பேசியது:

திருப்புல்லாணி வட்டாரத்தில் 2700 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. தென்னை பயிரிடும் விவசாயிகள் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக சொட்டு நீர்ப்பாசனம், தேவையான அளவு உரம் இடுதல் மற்றும் ஒருங்கிணைந்த பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடித்து பயன் பெற வேண்டும்.

தென்னை வளர்ச்சி வாரியத் திட்டத்தின் கீழ் 20 வயதுக்கு மேற்பட்ட தென்னை மரங்களை வளர்க்கும் விவசாயிகளுக்கு பராமரிப்பு ஊக்கத் தொகையாக தலா ரூ.17,500 ஒரு ஹெக்டேருக்கு வழங்கப்படுவதாகவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் குளிர்ப்பதனக் கிடங்குகள் அமைக்க திட்டம்**

First Published : 30 Apr 2010 02:47:07 AM IST

தருமபுரி, ஏப்.29: விளைபொருளை வைத்துகொண்டு விவசாயிகளுக்கு கடன் வழங்கும் வகையில் அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும் சாதாரண கிடங்குகள் மற்றும் குளிர்ப்பதனக் கிடங்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் கரிகாலன் கூறியுள்ளார்.

இது குறித்து வியாழக்கிழமை அவர் கூறியது:

விவசாயிகளின் பயிர் சாகுபடி பரப்பைக் கொண்டு அனைவருக்கும் ஓராண்டு கால பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 2009-10-ம் ஆண்டில் மாவட்டத்தில் ரூ.28 கோடிக்கு பயிர்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. தொழில்நுட்பக் கருவிகள் வாங்குவதற்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மானியத்துடன் கூடிய கடன்களை வழங்கி வருகிறது.

மத்தியக் கால கடன்கள் மூலம் கறவை மாடுகள், சொட்டுநீர்ப் பாசனம் அமைத்தல் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த பணிகளுக்கு கடந்த ஆண்டு ரூ.6 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், விவசாய விளைப்பொருள்களின் சந்தை விலை குறைவாக இருக்கும்போது அவற்றை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் அடமானம் வைத்து கடன் வாங்கும் வசதி மாவட்டத்தில் 15 வங்கிகளில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் விளை பொருள்களை அடமானம் வைத்து, அதன் மொத்த மதிப்பில் 70 சதவீதத் தொகையை கடனாகப் பெறலாம். சந்தை விலைக்கு அதிகரிக்கும் போது வங்கியில் அடமானம் வைத்துள்ள விளைபொருள்களை மீட்டு, விற்பனை செய்து கடனை திருப்பி செலுத்தலாம்.

தற்போது இத்திட்டத்துக்கு விவசாயிகள் மத்தியில் அதிக வரவேற்பு உள்ளது. எனவே இத்திட்டத்தை அனைத்து வங்கிகளுக்கும் விரிவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

மேலும் பாலக்கோடு பகுதிகளில் அதிக அளவு காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றை வங்கிகளில் வைத்து கடன் பெறும் வசதிக்காக இப்பகுதியில் குளிர்ப்பதன வசதியுடன் கூடிய கிடங்குகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

**10 லட்சம் விதைகளை விநியோகிக்க முடிவு**

First Published : 30 Apr 2010 12:43:00 AM IST

பெங்களூர், ஏப்.29: பெங்களூரை மீண்டும் பசுமையாக்க 10 லட்சம் விதைகளை பொதுமக்களிடம் விநியோகித்து, நகரின் வெப்பநிலை அதிகரித்து வருவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியை பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு நிறுவனம் (பயோடைவர்சிட்டி கன்சர்வேஷன்) துவக்கி உள்ளது.

÷பெங்களூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்நிறுவனம், பழங்கால கட்டட முறைகளைப் பின்பற்றி கட்டப்படும் கட்டட திட்டங்களை ஊக்குவித்தல், எரிசக்தி பயன்பாட்டை குறைத்து, சுற்றுப்புறத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாத பசுமைக் கட்டடங்களை கட்டுவதற்கான ஆலோசனைகளை வழங்குவது போன்ற பணிகளை செய்து வருகிறது.

÷விதை விநியோகத் திட்டம் குறித்து நிறுவனத்தின் முதன்மைச் செயல் அதிகாரி சந்திரசேகர் ஹரிஹரன், நிருபர்களிடம் வியாழக்கிழமை கூறியது: குளுமையான நகரம் எனப் பெயர்பெற்ற பெங்களூரில் தற்போது வளர்ச்சிப் பணிகள் என்ற பெயரில் நகரில் இருந்த பெரும்பாலான மரங்கள் வெட்டி சாய்க்கப்படுகின்றன.

இதனால் நகரின் இயற்கையான குளுமை தட்பவெப்ப நிலை மாறிவிட்டது. ÷பருவநிலை மாற்றத்தால் நகரின் வெப்பம் அதிகரித்துவிட்டதை நாம் உணர முடிகிறது. இதுகுறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், நகரில் மீண்டும் மரங்களை வளர்த்து பசுமையாக்கவும் மில்லியன் சீட்பால் கெம்பைன் என்ற பெயரில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தத் துவங்கியுள்ளோம்.

÷இதற்காக பத்து லட்சம் மர விதைகளை மண், வேம்பு இலைக் கலவைகளுக்குள் அடைத்து விதைப் பந்துகளைப் போல உருவாக்கி அவற்றை பொதுமக்களுக்கு வழங்க உள்ளோம்.

இதுபோன்ற விதைப் பந்துகளை மரங்கள் இல்லாத பகுதிகளில் சாலையோரம், பூங்காக்களில் போட்டுவிட்டால் அவை பறவைகளால் சேதமடையாமல் சில மாதங்கள் வரை அப்படியே இருக்கும்.

÷மழை பெய்யத் துவங்கும்போது அந்த விதைகள் முளைக்கத் துவங்கி மரமாகும். ஒரு விதையை ரூ.1க்கு விற்க திட்டமிட்டுள்ளோம்.

மொத்தம் 10 லட்சம் விதைகளை 6 மாதங்களுக்குள் நகர மக்களிடையே விநியோகிக்க முடிவு செய்துள்ளோம்.

பருவமழைக் காலம் துவங்க இன்னும் 2 மாதங்களே உள்ளதால் இந்த திட்டம் முழு வெற்றியடையும் என்று நம்புகிறோம் என்றார் அவர்.

**மலையோரப் பகுதிகளில் மழை நீடிப்பு: அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

First Published : 30 Apr 2010 06:08:01 AM IST

நாகர்கோவில், ஏப். 29: கன்னியாகுமரி மாவட்டத்தில் மலையோரப் பகுதிகளில் கோடை மழை நீடிப்பதால் அணைகளின் நீர்மட்டம் மெதுவாக உயர்ந்து வருகிறது.

மாவட்டத்தில் கோடை வெயில் சுட்டெரித்து வரும் நிலையில் மலையோரப் பகுதிகளில் மிதமான மழை நீடிக்கிறது.

வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பேச்சிப்பாறை அணைப் பகுதியில் 21.2 மி.மீ, பெருஞ்சாணி அணைப் பகுதியில் 20 மி.மீ., சுருளோட்டில் 16 மி.மீ., கன்னிமாரில் 1.5 மி.மீ., புத்தன் அணையில் 20.2 மி.மீ., ஆரல்வாய்மொழியில் 3.6 மி.மீ. மழை பெய்தது.

பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 183 கன அடியும், பெருஞ்சாணி அணைக்கு வினாடிக்கு 40 கன அடியும் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

மலையோரப் பகுதிகளில் மிதமான மழை நீடிப்பதையடுத்து பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் நீர்மட்டம் மெதுவாக உயர்ந்து வருகிறது.

வியாழக்கிழமை பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 20.30 அடியாக இருந்தது. பெருஞ்சாணி நீர்மட்டம் 19.05 அடியாக இருந்தது.

கடந்த 6 நாள்களுக்குமுன் பேச்சிப்பாறை நீர்மட்டம் 18.80 அடியாகவும், பெருஞ்சாணி நீர்மட்டம் 17.60 அடியாகவும் இருந்தது.

**கொடைக்கானலில் உருளை விளைச்சல் குறைவு**

First Published : 30 Apr 2010 03:31:12 AM IST



கொடைக்கானல், ஏப். 29: கொடைக்கானலில் பருவமழை பொய்த்த காரணத்தால், உருளை மற்றும் பீன்ஸ் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கொடைக்கானலில் பொதுவாக நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்கள் பனிக்காலம். ஆனால், இந்தாண்டு டிசம்பர் மாதத்தில் அவ்வப்போது மழை பெய்ததால், குளிர்காலம் குறைந்து காணப்பட்டது.

ஆனால், அதனைத் தொடர்ந்து ஜனவரி மாதத்தில் நல்ல பனிப் பொழிவும், வெயிலும் நிலவியது. இதனால், பனி மற்றும் வெயிலின் தாக்கத்தினால் விவசாயம் பாதிக்கப்பட்டது.

இதையடுத்து, பிப்ரவரி, மார்ச் மாதங்களிலும் மழை பெய்யாததால், நகர் மற்றும் கிராமப் பகுதிகளில் குடிதண்ணீருக்கே பிரச்னை ஏற்பட்டது இருப்பினும், ஜனவரியில் வில்பட்டி, அட்டுவம்பட்டி, பிரகாசபுரம், சகாயபுரம், பள்ளங்கி, கோம்பை ஆகியப்பகுதிகளில், உருளைக்கிழங்கை விவசாயிகள் பயிரிட்டனர். ஆனால், பருவமழை இல்லாததால் உருளைக்கிழங்கு விளைச்சல் குறைந்தது.

இது குறித்து, விவசாயி ஜெயபால் கூறியதாவது:

பணப் பயிரான பீன்ஸ், கேரட், உருளைக்கிழங்கு ஆகியன முக்கியமானவை. இவற்றை அதிகமாக விவசாயிகள் பயிரிட்டு வருவது வழக்கம். இந்தாண்டு ஜனவரியில், கொடைக்கானலின் பல பகுதிகளில் உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டது. ஆனால்,பருவமழை மாற்றத்தால் பணப் பயிர்கள் பாதிக்கப்பட்டு, விளைச்சல் குறைந்துள்ளது.

உருளைக்கிழங்கு 140 நாள்களில் விளையும் தன்மை கொண்டது. இது, ஆண்டுக்கு இரண்டு முறை விளையும். தற்போது, 50 கிலோ சிப்பம் ரூ. 450 முதல் 500 வரை விற்கப்படுகிறது. உருளைக்கிழங்கு நன்கு விளைந்திருந்தால் ரூ. 750 முதல் 800 வரை விற்பனையாகும்.

விதைக் கிழங்கு நட்டு, உரமிட்டு செடி வளர்ந்த பிறகு பூச்சி மருந்து பயன்படுத்த வேண்டும். தற்போது, உரம், பூச்சி மருந்து ஆகியவை கிடைப்பது சற்று சிரமமாக உள்ளது. 40 கிலோ உரத்தின் விலை ரூ. 280. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன் ரூ. 180-க்கு விற்பனை செய்யப்பட்டது.

தற்போது, விவசாய இடு பொருள்களின் விலை அதிகமாகி வருவதால், விவசாயம் குறைந்து கொண்டே வருகிறது. இதனால் பல விவசாயிகள் தங்களது நிலங்களை விற்று வருகின்றனர்.

கொடைக்கானலில் கடந்த 10 ஆண்டுகளில் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. அந்த நிலங்களை வாங்கும் பிரமுகர்கள் அவற்றை காட்டேஜ்களாக மாற்றம் செய்கின்றனர். செண்பகனூரின் பல பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் விற்பனை செய்யப்பட்டு, அவை தற்போது பிளாட்டுகளாக மாறி வருகின்றன.

இதனால், விவசாயப் பொருள்கள், பழ வகைகள் அழிந்து வருகின்றன. விவசாயிகளும் குறைந்து வருகின்றனர் என்றார்.

**கொப்பரை கொள்முதலை விரைவுபடுத்தக் கோரிக்கை**

First Published : 30 Apr 2010 06:49:12 AM IST

உடுமலை,ஏப்.29: வியாபாரிகளின் ஆதிக்கத்தை தடுத்து நிறுத்த கொப்பரை கொள்முதலை விரைவுபடுத்த வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தென்னை விவசாயிகளின் நலனை முன்னிட்டு தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைக ளை எடுத்து வருகிறது. தனியார் நிறுவனங்கள் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ.35 என நிர்ணயித்து கொள்முதல் செய்து வந்தாலும் அரசு தரப்பில் கிலோ ஒன்றுக்கு ரூ. 44.50 என நிர்ணயம் செய்து விவசாயிகளிடம் இருந்து தற்போது கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

வேளாண் வணிகத்துறை, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தேசிய கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியவை இணைந்து தென்னை விவசாயிகளிடம் இருந்து இந்த கொப்பரை கொள்முதலை ஒருங்கிணைந்து செய்து வருகின்றன.

இதற்கிடையே கொப்பரை கொள்முதலை தமிழக அரசு கடந்த மாதம் இறுதியில் நிறுத்தி வைக்க உத்தரவிட்டிருந்தது. தென்னை விவசாயிகள் கோரிக்கையை அடுத்து மீண்டும் கொப்பரை கொள்முதலை இந்த மாதம் அரசு துவங்கியது. இதன்படி ஏப்ரல் 16ம் தேதி முதல் விவசாயிகள் முன் பதிவு செய்து கொள்ளலாம் என அரசு அறிவித்திருந்தது. இந்த அறிவிப்பை தொடர்ந்து உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டத்தில் 1200 விவசாயிகள் பதிவு செய்தனர். பதிவு முன்னுரிமைப்படி ஏப். 19ம் தேதி முதல் கொப்பரை கொள்முதல் தொடங்கப்பட்டது. ஒரு நாளைக்கு சராசரியாக சுமார் 20 விவசாயிகளிடம் இருந்து மட்டுமே அதிக பட்சம் 10 டன் வரை கொப்பரை கொள் முதல் செய்யப்பட்டு வருகிறது. மீறி வரும் விவசாயிகள் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர். இதனால் விவசாயிகளிடம் பலநூறு டன் அளவிற்கு கொப்பரை தேக்கமடைந்து வருகிறது. இது விவசாயிகள் தரப்பில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து தென்னை விவசாயிகள் கூறியது:

சராசரியாக ஒரு நாளைக்கு 20 விவசாயிகளிடமே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதன்படி பதிவு செய்த 1200 விவசாயிகளிடமும் ஒரு முறை கொள்முதல் செய்யவே இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிடும். இதனால் தென்னை விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படும் நிலைமை உள்ளது. எங்களிடம் உள்ள கொப்பரையை இரண்டு மாதங்களுக்கு இருப்பு வைக்கும் அளவிற்கு வசதி கிடையாது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி தனியார் நிறுவனங்கள் விவசாயிகளிடம் இருந்து கொப்பரையை கொள்முதல் செய்து கொள்கின்றன.

மேலும்தினமும் குறிப்பிட்ட அளவுதான் கொப்பரை கொள்முதல் செய்யப்படும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த விதிமுறையை தளர்த்தி கொப்பரை கொள்முதலை விரைவு படுத்தினால் நல்லது.

குறிப்பாக ஒரு கிலோ கொப்பரைக்கு ரூ.44.50 என்பதை ரூ.50 ஆக உயர்த்தி தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

இது குறித்து தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணைய அதிகாரிகள் கூறியது:

உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டத்தில் மொத்தம் 1200 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். தொடர்ந்து பதிவு பணிகள் நடந்து வருகிறது. அரசு விதிமுறைகளின்படி ஒரு நாளைக்கு அதிக பட்சம் 20 விவசாயிகளிடம் இருந்து 10 டன் அளவிற்கே கொள்முதல் செய்ய முடியும். இதில் கழிவுகளை கண்டுபிடித்து தரம் பிரித்து எடுக்க அதிக நேரம் ஆகிறது. மேலும் இவைகளின் தரத்தை நிர்ணயம் செய்து குடோன்களில் இருப்பு வைக்க பெரிதாக எதுவும் வசதிகளை கிடையாது. கொள்முதல் செய்யும் தேதியில் இருந்து 30 நாட்களில் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.

உடுமலை மற்றும் மடத்துக்குளம் வட்டத்தில் இதுவரை 150 விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சுழற்சி முறையில் அனைத்து விவசாயிகளிடம் இருந்து கொப்பரைகளை கொள்முதல் செய்ய சுமார் இரண்டு மாதங்கள் ஆகிவிடும். இருக்கும் ஊழியர்களை வைத்து வேலையை சமாளித்து வருகிறோம் என்றனர்.

தினமலர்

**வேளாண் பல்கலையில் புறக்காவல் மையம்**

கோவை:கோவை வேளாண் பல்கலைக்கு வரும் விஞ்ஞானிகள் மற்றும் வி.ஐ.பி.,க்களின் பாதுகாப்புக்காக 24 மணி நேரமும் செயல்படும் புதிய போலீஸ் காவல் மையம் (அவுட் போஸ்ட்) திறக்கப் பட்டது. போலீஸ் கமிஷனர் சைலேந்திரபாபு திறந்து வைத்தார். இது குறித்து, பல்கலையின் தொழில் நுட்ப அலுவலர் (பாதுகாப்பு) பேராசிரியர் சீனிவாசன் கூறியதாவது:கோவை வேளாண் பல்கலை ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. முக்கிய ஆராய்ச்சிகள் மற்றும் விரிவாக்கப் பணிகள் நடைபெறுகின்றன.

இதற்கேற்ப பல புதிய வகுப்புகளும் துவக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சி தொடர்பாக தேசிய, சர்வதேச கருத்தரங்குகளும் நடக்கின்றன. இவற்றில் பங்கேற்க நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த முக்கிய விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், அமைச்சர்கள், வெளிநாட்டு வி.ஐ.பி.,க்கள் வருகின்றனர். இவர்களின் வருகையின் போது அசம்பாவிதம் நடக்காமல் தடுக்கவும், நிரந்தர பாதுகாப்பு பணிக்காகவும் போலீஸ் 'அவுட் போஸ்ட்' துவக்கப்பட்டுள்ளது. இங்கு, ஒரு எஸ்.ஐ., இரு ஏட்டுகள் 24 மணி நேரமும் பணியில் இருப்பர், என்றார்.

**நத்தத்தில் மாங்காய் விளைச்சல் பாதிப்பு**

நத்தம்:நத்தம்,சாணார்பட்டியில் மாங்காய் விளைச்சல் குறைந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளது.திண்டுக்கல் மாவட்டத்தில் நத்தம்,சாணார்பட்டியில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.கடந்தாண்டு போதிய மழை இல்லாததால் 30 சதவீத மரங்களில் மட்டுமே பூக்கள் பூத்தது.

கடந்த சில நாட்களாக பெய்த சாரல் மழையால் மாம்பிஞ்சுகளும் உதிர்ந்தன. இமாம்பசந்த்,செந்துரா, பங்கனப்பள்ளி ரக மாங்காய்கள் தற்போது மார்க்கெட்டிற்கு குறைந்த அளவில் வரத் துவங்கியுள்ளன. கமிஷன் மண்டிகளில் செந்தூர கிலோ 25 ரூபாய் முதல் 30 வரையிலும், பங்கனபள்ளி கிலோ 40 ரூபாய்க்கும்,இமாம் பசந்த் 60 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.சில்லரை விலையில் பத்து ரூபாய் முதல் இருபது ரூபாய் வரை கூடுதலாக விற்கப்படுகிறது. இந்தாண்டு மா விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் வரத்து குறைந்து விலை அதிகமாக இருக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**காரட் விளைச்சல் குறைவு:விலையும் சரிவு**

கொடைக்கானல்:கொடைக்கானல் மலைப்பகுதியில் காரட் விளைச்சல் குறைந்துள்ளதோடு,விலையும் இல்லாததால் கவலை அடைந் துள்ளனர்.மேல்மலை கிராமங் களான மன்னவனூர், அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, பூம்பாறைஆகிய பகுதிகளில் காரட் பயிரிடப்பட்டுள் ளது. கடந்த சில மாதங் களாக மழையில்லாததால் விளைச்சல் பாதிக்கப்பட் டுள்ளது. போதிய விலை கிடைக்காததால் சில இடங்களில் அறுவடை செய்யாமல் விவசாயிகள் உள்ளனர். மன்னவனூர் வேலாயுதம் கூறுகையில்,' பருவமழையின்மையால் காரட் விளைச்சல்குறைவாக உள்ளது. நன்கு விளைச்சலான காரட் (10 கிலோ) ரூ.220 வரை விற்பனையாகும். தற்போது ரூ.120 வரை மட்டுமே விலை போகிறது. இதனால் காரட் விளைவிக்க போட்ட முதல் கூட கிடைக்கவில்லை என்றார்.

**புதிய காய்கறி மார்க்கெட்டில் வாடகை நிர்ணயம்**

மதுரை:மதுரை மாட்டுத்தாவணி காய்கறி மார்க்கெட்டில் அமைய உள்ள புதிய கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.தற்போதைய சென்ட்ரல் மார்க்கெட்டில் புதினா, கறிவேப்பிலை, மல்லி, பச்சை மிளகாய், இஞ்சி வியாபாரிகள் சங்கம், எம்.ஜி.ஆர்., அனைத்து காய்கறி சில்லரை வியாபாரிகள் நலச்சங்கம், வாழை இலை சில்லரை வியாபாரிகள் சங்கம், மதுரை பசும்பொன் முத்துராமலிங்கம் மேட்டுப்பகுதி காய்கனி கமிஷன் வியாபாரிகள் சங்கம், சென்ட்ரல் மார்க்கெட் காய்கனி வியாபாரிகள் சங்கம், சென்ட்ரல் மார்க்கெட் தக்காளி மற்றும் சீமைக்காய் வியாபாரிகள் சங்கம், வடக்கு ஆவணி மூல வீதி சென்ட்ரல் மார்க்கெட் மேட்டுப்பகுதி வியாபாரிகள் சங்கம் ஆகியவற்றை சேர்ந்தவர்கள் கடை வைத்துள்ளனர்.

இவர்கள் தவிர, மீதி உள்ள கடைகள், ஏலத்தின் மூலம், புதியவர்களுக்கு ஒதுக்கப்படும். இக்கடைகளுக்கான வாடகையை மாநகராட்சி நிர்ணயித்துள்ளது. 20க்கு 20 அடி அளவுள்ள பெரிய கடைகளுக்கு மாத வாடகை ஆறாயிரம் ரூபாய் எனவும், மற்ற கடைகளுக்கு அளவுக்கு ஏற்ப 4 ஆயிரம் ரூபாய், 2 ஆயிரத்து 500 ரூபாய், 2 ஆயிரம் ரூபாய், ஆயிரத்து 500 ரூபாய் எனவும் வாடகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளின் கோரிக்கைகள் மீது உடன் நடவடிக்கை: கலெக்டர்**

மதுரை:"விவசாயிகளின் கோரிக்கைகள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும்," என மதுரையில் நடந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் காமராஜ் தெரிவித்தார்.இக்கூட்டத்தில் டி.ஆர்.ஓ., தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், விவசாய இணை இயக்குனர் சங்கரலிங்கம், கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) தெய்வேந்திரன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.சதுரகிரி மலை குப்பம்மாள் சமுத்திரம் நீர் வள நில வள திட்டத்தின்கீழ் கரை வலுப்படுத்தும் பணிகள் முழுமையாக செயல்படுத்தவில்லை என அப்பகுதியினர் தெரிவித்தனர். "பணிகளை நேரில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்," என கலெக்டர் காமராஜ் பதிலளித்தார்.

சீமைக்கருவேல் மரங்கள் கண்மாய்களில் இருப்பதால் நிலத்தடி நீர் மட்டம் குறைகிறது என சில விவசாயிகள் குற்றம் சாட்டினர். இதுகுறித்து அனைத்து கண்மாய்களிலுள்ள சீமைக் கருவேல மரங்கள் குறித்து விபரம் சேகரிக்கவும், அரசுக்கு ஒரு கருத்துரு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கும்படி பொதுப்பணித்துறையினருக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.பாசனத்திற்கு தண்ணீர் வீணாகாமல் சேமிக்க, தடுப்பணைகள் கட்ட வேண்டும் என சிலர் வலியுறுத்தினர்.

எங்கு தடுப்பணைகள் கட்ட வேண்டும் என நேரில் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யும்படி, பொதுப்பணித் துறை பெரியாறு வைகை வடிநில கோட்ட செயற் பொறியாளரை கலெக்டர் கேட்டு கொண்டார். மதுரை மேற்கு ஒன்றியம் தோடனேரி, அலங்காநல்லூர், பாலமேடு பகுதியில் சமீபத்திய மழை, சூறாவளியால் சேதமுற்ற வாழை மரங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி தோட்டக்கலைத்துறையினருக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்.

**விவசாயிகளின் கோரிக்கைகள் மீது உடன் நடவடிக்கை: கலெக்டர்**

மதுரை:"விவசாயிகளின் கோரிக்கைகள் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும்," என மதுரையில் நடந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் காமராஜ் தெரிவித்தார்.இக்கூட்டத்தில் டி.ஆர்.ஓ., தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், விவசாய இணை இயக்குனர் சங்கரலிங்கம், கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) தெய்வேந்திரன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.சதுரகிரி மலை குப்பம்மாள் சமுத்திரம் நீர் வள நில வள திட்டத்தின்கீழ் கரை

வலுப்படுத்தும் பணிகள் முழுமையாக செயல்படுத்தவில்லை என அப்பகுதியினர் தெரிவித்தனர். "பணிகளை நேரில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்," என கலெக்டர் காமராஜ் பதிலளித்தார்.

சீமைக்கருவேல் மரங்கள் கண்மாய்களில் இருப்பதால் நிலத்தடி நீர் மட்டம் குறைகிறது என சில விவசாயிகள் குற்றம் சாட்டினர். இதுகுறித்து அனைத்து கண்மாய்களிலுள்ள சீமைக் கருவேல மரங்கள் குறித்து விபரம் சேகரிக்கவும், அரசுக்கு ஒரு கருத்துரு அனுப்பவும் நடவடிக்கை எடுக்கும்படி பொதுப்பணித்துறையினருக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.பாசனத்திற்கு தண்ணீர் வீணாகாமல் சேமிக்க, தடுப்பணைகள் கட்ட வேண்டும் என சிலர் வலியுறுத்தினர்.

எங்கு தடுப்பணைகள் கட்ட வேண்டும் என நேரில் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்யும்படி, பொதுப்பணித் துறை பெரியாறு வைகை வடிநில கோட்ட செயற் பொறியாளரை கலெக்டர் கேட்டு கொண்டார். மதுரை மேற்கு ஒன்றியம் தோடனேரி, அலங்காநல்லூர், பாலமேடு பகுதியில் சமீபத்திய மழை, சூறாவளியால் சேதமுற்ற வாழை மரங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி தோட்டக்கலைத்துறையினருக்கு கலெக்டர் அறிவுறுத்தினார்.

**வெல்லம் விலை உயர்வு உற்பத்தியாளர் மகிழ்ச்சி**

நாமக்கல்: பிலிக்கல்பாளையம் மார்க்கெட்டில் வெல்லம் விலை அதிகரித்துள்ளதால், வெல்லம் உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ப.வேலூர் பகுதிக்கு உட்பட்ட அண்ணாநகர், பிலிக்கல்பாளையம், ஆனங்கூர், ஜேடர்பாளையம், திடுமல், சிறுநல்லிக்கோவில், கொத்தமங்கலம், ஜமீன் இளம்பள்ளி, சோழசிராமணி உள்ளிட்ட பகுதிகளில் 10 ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு சாகுபடி செய்யப்படும் கரும்புகள், சுற்றுப்பகுதியில் உள்ள 100க்கும் அதிகமான வெல்ல ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது. ஆலைகளில் தயாரிக்கப்படும் உருண்டை மற்றும் அச்சு வெல்லம் 30 கிலோ சிப்பமாக கட்டி, வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமையில் வெல்ல மண்டிக்கு எடுத்துச்சென்று ஏலம் விடப்படும். அதற்காக, பிலிக்கல்பாளையத்தில் 13 மண்டிகள் செயல்படுகிறது.

நாமக்கல், சேலம், கரூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள் இந்த ஏலச்சந்தைக்கு வந்து, போட்டி போட்டு ஏலம் எடுப்பர். ஏலம் எடுத்த வெல்லத்தை லாரிகள் மூலம் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா, சட்டீஸ்கர் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்புகின்றனர். மார்க்கெட்டில், கடந்த வாரத்தை விட இந்த வாரம் வெல்லம் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் ஒரு சிப்பம் (30 கிலோ) உருண்டை வெல்லம் 770 ரூபாய் முதல் 800 ரூபாய் வரை ஏலம் போனது. இந்த வாரம் 800 ரூபாய் முதல் 810 ரூபாய் வரை ஏலம் போனது. கடந்த வாரம் 750 ரூபாய் முதல் 800 ரூபாய் வரை ஏலம் போன பெரிய அச்சு வெல்லம் ஒரு சிப்பம், இந்த வாரம் 780 ரூபாய் முதல் 800 ரூபாய் வரை ஏலம் போனது. இது குறித்து வெல்லம் உற்பத்தியாளர் ஒருவர் கூறியதாவது: வெல்ல மார்க்கெட்டிற்கு கடந்த வாரம் 14 ஆயிரம் சிப்பங்கள் வரத்து இருந்தது. அதனால், விலை குறைந்தது. இந்த வாரம் உருண்டை வெல்லம் 7,000 சிப்பம், அச்சு வெல்லம் 3,800 சிப்பம் வரத்து இருந்தது. மார்க்கெட்டுக்கு வெல்ல சிப்பங்கள் வரத்து குறைந்ததால், விலை சற்று அதிகரித்துள்ளது, என்றார்.

**விலைவாசி உயர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம்**

நாமக்கல்: தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் அனைத்து தொழிற் சங்க கூட்டமைப்பு சார்பில், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தக்கோரி பி.எஸ்.என்.எல்., அலுவலகம் முன் ஆர்பாட்டம் நடந்தது. பி.எஸ்.என்.எல்., எம்ப்ளாய்ஸ் யூனியன் மாவட்ட தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் முருகேசன், அஞ்சல் ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ராமசாமி, ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில துணை

பொதுச்செயலாளர் செல்வராஜன், அனைத்து தொழிற் சங்க கூட்டமைப்பின் மாவட்ட அமைப்பாளர் ரங்கசாமி ஆகியோர் பேசினர். கூட்டத்தில், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். புதிய பென்சன் திட்டத்தை கைவிட வேண்டும். காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகள் வலிறுத்தப்பட்டது.

**கொப்பரை கொள்முதல் மையத்தில் 'லோடிங்' கட்டணம் வசூல் முறைகேடு:அரசு நிதி ஒதுக்கியும் விவசாயிகளிடம் அதிகாரிகள் கெடுபிடி**

பொள்ளாச்சி:கொப்பரை கொள்முதல் மையத்தில் விவசாயிகளிடம் 'லோடிங்' கட்டணம் வசூலித்து லட்சக்கணக்கான ரூபாய் முறைகேடு நடப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.தேங்காய் விலை சரிவை தடுக்க மத்திய அரசு கொப்பரைக்கு ஆதார விலையாக கிலோ 44.50 ரூபாய் நிர்ணயம் செய்து மாநில அரசு மூலம் கொள்முதல் செய்கிறது. பொள்ளாச்சியில் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி மூலம் கொப்பரை கொள்முதல் நடக்கிறது.

கொள்முதலில் விவசாயிகள் பெயரில் கொப்பரை வியாபாரிகளே பயனடைவதாகவும், விவசாயிகளுக்கு கிலோவுக்கு மூன்று ரூபாய் கமிஷன் வழங்கி அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதாகவும், இதனை கண்டு கொள்ளாமல் இருக்க அதிகாரிகளுக்கு கிலோவுக்கு இரண்டு ரூபாய் லாபம் கிடைப்பதாகவும் குற்றச்சாட்டு உள்ளது.இந்நிலையில், மூட்டை ஏற்றி இறக்கவும், கொப்பரை மூட்டை பிடிக்கவும் பணம் வசூலித்து லட்சக்கணக்கில் ஊழல் நடப்பதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கொப்பரை விவசாயிகள் கூறியதாவது:கொள்முதல் மையத்திற்கு கொப்பரை மூட்டையை கொண்டு வருவதற்கு மட்டுமே விவசாயிகள் செலவிட வேண்டும். கொப்பரை இறக்கு கூலி, தரம் பிரித்தல், மூட்டையாக்குதல் போன்ற பணிகளுக்கு விவசாயிகள் பணம் கொடுக்க வேண்டியதில்லை என அரசு உத்தரவுள்ளது. இதற்கு, குவிண்டாலுக்கு 15 ரூபாய் 'லோடிங்' கட்டணம் அரசு வழங்குகிறது. ஆனால், கொள்முதல் மைய கண்காணிப்பாளரும், கொப்பரை வியாபாரிகள் ஐந்து பேரும் பேச்சு நடத்தி ஒரு மூட்டைக்கு 18 ரூபாய் என 'லோடிங்' கட்டணம் நிர்ணயித்துள்ளனர்.

அரசாங்கம் கொடுக்கும் கட்டணம் இல்லாமல், விவசாயிகளிடம் கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்படுகிறது.இத்தொகை கொடுத்தால் தான் மூட்டையை இறக்குகின்றனர். அரசு கொடுக்கும் பணத்தை அதிகாரிகளே வைத்துக்கொள்கின்றனர். பொள்ளாச்சி கொள்முதல் மையத்திலும், துணை மையங்களிலும் தினசரி ஆயிரம் மூட்டைகளில், 500 குவிண்டால் கொள்முதல் செய்யப்படுகிறது.லோடிங் கட்டணமாக அரசாங்கம் வழங்கும் பணத்தில் தினமும் 7,500 ரூபாயை அதிகாரிகள் முறைகேடாக எடுத்துக்கொள்கின்றனர்.

கடந்த ஆண்டில் மட்டும் 30 லட்சம் ரூபாய்க்கு மேல்' லோடிங்' கட்டணத்தில் ஊழல் நடந்துள்ளது.விவசாயிகளிடம் லோடிங் கட்டணம் வசூலிப்பதாக எந்த ஆவணமும் பராமரிக்கப்படுவதில்லை. மேலும், சாக்கு, சணல் கயிறு வாங்கி வருமாறும் விவசாயிகள் அலைக்கழிக்கப்படுகின்றனர்.கொப்பரை கொள்முதலில் விவசாயிகளுக்கு பலன் கிடைக்கிறதோ இல்லையோ, வியாபாரிகளும், அதிகாரிகளும் கூட்டு கொள்ளை அடிக்கின்றனர்.' இவ்வாறு, விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

கொள்முதல் மைய கண்காணிப்பாளர் ஈஸ்வரனிடம் கேட்டபோது, 'விவசாயிகளை சணல் கயிறு, சாக்குப்பை வாங்கி வருமாறு கூறுபவர்களை கண்டித்துள்ளேன். விவசாயிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுப்படியே லோடிங் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அரசு வழங்கும் லோடிங் கட்டணம் கட்டுபடியாகவில்லை என்று கலாசு தொழிலாளர்கள் கூறுவதால் விவசாயிகளிடம் பணம் வசூலித்து கொடுக்கிறோம்.உடுமலை, பல்லடம் உள்ளிட்ட அனைத்து

மையத்திலும் விவசாயிகளிடம் லோடிங் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அரசு வழங்கும் பணத்திற்கு முறையாக கணக்கு பராமரிக்கப்படுகிறது' என்றார்.

**விவசாயிகளின் விபத்து: நிவாரணம் பெற விண்ணப்பிக்க நாள் நீட்டிப்பு**

ராமநாதபுரம்;விபத்தில் பலியாகும் விவசாயிக்கான நிவாரணம் பெற விண்ணப்பிக்க, நாள் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் தொழிலாளர்கள் நலவாரியத்தில் , விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. விபத்தில் பலியாகும் விவசாயிக்கு அரசு தரப்பில் ஒரு லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படுகிறது. இதற்காக முதல் தகவல் அறிக்கை(எப்.ஐ.ஆர்.,), பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று மூன்று நாட்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

விபத்தில் பலியாகும் போது, சம்மந்தப்பட்டவரின் குடும்பத்தினர் சோகத்தில் மூழ்கியிருப்பவர். இந்த நேரத்தில், எப்.ஐ.ஆர்., மற்றும் பிரேத பரிசோதனை சான்றிதழ் பெறுவதில் மனம் ஈடுபடாது. இதனால் விண்ணப்பிக்கும் நாட்கள் தள்ளிப்போவதால், விவசாயிகள் பலரும் நிவாரணம் பெறுவதில் சிக்கல் இருந்து வந்தது. இதை தடுக்கும் விதமாக, மூன்று நாட்கள் என இருந்த, விண்ணப்பிக்கும் நாட்களை 30 ஆக நீட்டிப்பு செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

இறப்புக்கு பின் தேவையான சான்றிதழை பெற்று 30 நாட்களுக்குள் சம்மந்தப்பட்ட சமூக நல பாதுகாப்பு தாசில்தார்களிடம் விண்ணப்பித்து பயன்பெறலாம். ராமநாதபுரம் டி.ஆர்.ஓ., பாலசுப்பிரமணியன் கூறியதாவது:முன்பு நாட்கள் குறைவாக இருந்ததால் பலருக்கும் பாதிப்பாக இருந்தது. தற்போது விண்ணப்பிக்க நாட்கள் நீட்டிக்கப்பட்டுள்ளதால், பாதிக்கப்படும் விவசாயிகளின் குடும்பங்களுக்கு பலன் கிடைக்கும், என்றார்.

**வறட்சியால் மாம்பழ விளைச்சல் பாதிப்பு : மா உரிமையாளர், குத்தகைதாரர் மோதல்**

நங்கவள்ளி: வறட்சி காரணமாக நடப்பாண்டில் மாம்பழ விளைச்சல் கடுமையாக பாதித்துள்ளது. மாந்தோட்டங்கள் நிறைந்த பகுதியில் குத்தகை பணம் வசூலிப்பது தொடர்பாக தோட்ட உரிமையாளருக்கும், குத்தகைதாரர்களுக்கும் இடையே மோதல் உருவாகியுள்ளது. நங்கவள்ளி, வனவாசி, ஜலகண்டபுரம் சுற்றுப்பகுதியில் மாந்தோட்டங்கள் அதிகம் உள்ளன. 5,000க்கும் மேற்பட்ட மாமரங்கள் உள்ளன. சீஸன் சமயத்தில் நங்கவள்ளியில் இருந்து அல்போன்ஸா, பெங்களூரா, செந்தூரா உள்ளிட்ட மாம்பழங்கள் வெளி மாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஒரு தோட்டத்தில் சராசரியாக 50 முதல் 200 மாமரங்கள் வரை இருக்கும். பொதுவாக தோட்ட உரிமையாளர்கள் காய்களை பறித்து விற்பனை செய்வதில்லை. பதிலாக வியாபாரிகளுக்கு ஒரு ஆண்டுக்கு மரங்களை குத்தகைக்கு விடுவர்.

வழக்கமாக ஃபிப்ரவரி இறுதியில் மா சீஸன் துவங்கும். ஒரு மாந்தோட்டத்தை வியாபாரி ஒரு லட்சம் ரூபாய்க்கு குத்தகைக்கு எடுத்தால், மா சீஸன் துவங்குவதற்கு முன் அட்வான்ஸாக 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை உரிமையாளருக்கு கொடுப்பர். மா சீஸன் முடிந்த பின், பணம் வாங்குவது கடினம் என்பதால், சீஸன் துவங்கியவுடன் முதன் முதலாக மாங்காய் பறிக்கும் போதே மீதி பணத்தை உரிமையாளர்கள் பெற்று கொள்வர். கடந்த ஆண்டு இதே சீஸனில் மாங்காய் அதிக அளவில் காய்த்தது. அதுபோல நடப்பாண்டிலும் மாங்காய் கொத்து கொத்தாக காய்த்து லாபத்தை ஈட்டி தரும் என்ற நம்பிக்கையில் கடந்த டிசம்பரில் வியாபாரிகள் அட்வான்ஸாக ஒரு குறிப்பிட்ட தொகையை தோட்ட உரிமையாளர்களுக்கு கொடுத்து விட்டனர். ஆனால், வறட்சி காரணமாக நடப்பாண்டில் நங்கவள்ளி பகுதியில் ஏராளமான மரங்கள் கருகி விட்டன. மற்ற மரங்களிலும் பிஞ்சுகள் காய்ந்து உதிர்ந்து விட்டன. அரிதாக சில மரங்களில் மட்டுமே மாங்காய் காய்த்தது. அந்த மாங்காய்களை பறிக்க விரும்பினால், தோடட உரிமையாளருக்கு மீதி தொகையை

கொடுக்க வேண்டும். நஷ்டம் காரணமாக மாங்காயை பறிக்கவில்லை என கூறி விட்டால், அட்வான்ஸ் தொகை திரும்ப கிடைக்காது என்பதால் நங்கவள்ளி பகுதியில் 50க்கும் மேற்பட்ட வியாபாரிகள் அட்வான்ஸையும் திரும்ப பெற முடியாமல், குத்தகைக்கு எடுத்த மரத்தில் மாங்காயும் பறிக்க முடியாமல் பரிதவிக்கின்றனர்.

**மேட்டூர் நீர்மட்டம் ஒரு அடி உயர்வு**

மேட்டூர்: நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் கோடைமழையால் மேட்டூர் அணை நீர் மட்டம் நேற்று ஒரு அடி உயர்ந்தது.

தமிழக-கர்நாடகா எல்லையில் உள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதியில் கடந்த சிலநாட்களாக பெய்து வரும் கோடைமழையால் கடந்த 26ம் தேதி விநாடிக்கு 2, 472 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று முன்தினம் 4, 480 கனஅடியாக அதிகரித்தது. நேற்று அணைக்கு 4, 594 கனஅடி நீர்வந்தது. அணையில் இருந்து குடிநீருக்காக 2, 100 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர்திறப்பை விட, நீர்வரத்து அதிகரித்ததால் நேற்று முன்தினம் 71.980 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று 72.210 அடியாக உயர்ந்தது. நீர்வரத்து காரணமாக நேற்று முன்தினம் 34.423 டி.எம்.சி.,யாக இருந்த நீர்வரத்து நேற்று 34.628 டி.எம்.சி.,யாக அதிகரித்தது. கடந்த 27ம் தேதி இரவு மேட்டூர் அணை சுற்றுப்பகுதியில் 39.4 மி.மீ., நேற்று முன்தினம் இரவு 5.4 மி.மீ., மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

**பயிர் காப்பீடு இழப்பீடு ரூ.8 கோடி ஒதுக்கீடு வங்கியாளர் கூட்டத்தில் கலெக்டர் தகவல்**

தஞ்சாவூர்: தஞ்சாவூரில் மாவட்ட வங்கியாளர்கள் முதலாவது நிலைக்குழு கூட்டம் நடந்தது.
கூட்டத்துக்கு தலைமை வகித்து கலெக்டர் சண்முகம் பேசியதாவது: கடந்தாண்டு கடன் திட்ட இலக்கில் 100 சதவீதத்துக்கு மேல் அரசு திட்டங்களில் வங்கியாளர்கள் கடனுதவி வழங்கியுள்ளனர். நடப்பாண்டிலும் வங்கியாளர்கள் ஒத்துழைக்க வேண்டும். கடந்தாண்டு கூட்டுறவு வங்கிகள் மட்டும் விவசாய கடனாக 81 கோடட ரூபாய் வழங்கியுள்ளது. இதுபோல, அனைத்து வங்கிகளும் விவசாயிகளுக்கான நேரடிக்கடன் மற்றும் நகைக்கடன் உரிய காலத்தில் வழங்கவேண்டும். கல்விக்கடனாக கடந்தாண்டு 100 கோடிக்கு மேல் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு ஜூன் மாதம் முதல் கல்விக்கடன் கோரும் தகுதியான அனைத்து விண்ணப்பங்களுக்கும் விரைவாக கடன் வழங்க வேண்டும். மகளிர் திட்டத்தில் நேரடி கடனாக 90 கோடி வழங்கப்பட்டதுக்கு மகளிர் திட்ட இயக்குனர் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை செயலர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஆயிரம் மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கியதுபோல, தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள 144 மகளிர் குழுக்களுக்கும் சுழல்நிதி உடன் வழங்க வேண்டும். மே ஒன்றாம் தேதி முதல் நான்காயிரத்து 124 மகளிர் குழுவினருக்கு முதல் கட்ட அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது. தொடர்ந்து அனைத்து மகளிர் குழுக்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்படும். ஆவின் பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை பகுதிகளில் 48 சங்கங்களை சேர்ந்த இரண்டாயிரம் பேருக்கு கறவை மாட்டுக்கடன் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு விரைவாக கடனுதவி வழங்க வேண்டும். தற்போது, மாவட்டத்தில் கலைஞர் வீட்டு வசதி திட்டத்தில் 10 ஆயிரம் கான்கிரீட் வீடுகளும், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தில் வீடுகள் கட்டும் பணிக்கு அதிக செங்கல்கள் தேவைப்படும். எனவே, செங்கல் காளவாய் அமைக்கும் மகளிர் குழுவினருக்கு மூன்று லட்சம் ரூபாய் வரை பொருளாதார கடனுதவி வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கடந்த 2008 - 09ம் ஆண்டுக்கான பயிர் காப்பீட்டு திட்டத்தில் நிலுவையில் இருந்த 10 சதவீதம் தொகையான எட்டு கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதை உடன் வங்கியாளர்கள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் பேசினார். ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் ஞானவேல், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் வெற்றிச்செல்வன், மகளிர் திட்ட அலுவலர் கலைவாணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**பருத்தி விளைச்சலில் உலகில் 2 ம் இடம்: சாதித்த விவசாயிகள்**

தேனி:கடந்த ஆண்டு நாடு முழுவதும் மழை குறைந்து வறட்சி நிலவினாலும், 2 கோடியே 95 லட்சம் பேல்கள் (ஒரு பேல் 170 கிலோ) பருத்தி விளைவித்து உலகில் 2ம் இடம் பிடித்து இந்திய விவசாயிகள் சாதனை படைத்துள்ளனர். கடந்த ஆண்டு நாடு முழுவதும் பருவமழை குறைந்து வறட்சி நிலவியது. இருப்பினும் பஞ்சாபில் 5.36 லட்சம் ஹெக்டேரிலும், அரியானாவில் 5.20 லட்சம் ஹெக்டேரிலும், ராஜஸ்தானில் 4.4 லட்சம் ஹெக்டேரிலும் பருத்தி சாகுபடி செய்யப்பட்டது. இந்த மூன்று மாநிலங்களிலும் சேர்த்து 39 லட்சம் பேல்கள் பருத்தி விளைவிக்கப்பட்டது.

குஜராத் மாநில விவசாயிகள் பருத்தி விளைச்சலில் சாதனை படைத்துள்ளனர். இம்மாநிலத்தில் 26.24 லட்சம் ஹெக்டேரில் 95 லட்சம் பேல்கள் பருத்தி விளைவிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் மொத்தம் 101.52 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் 2 கோடியே 95 லட்சம் பேல்கள் பருத்தி விளைந்துள்ளது. உலக அளவில் பருத்தி விளைச்சலில் இது இரண்டாம் இடம். அமெரிக்கா முதலிடத்திலும், சீனா மூன்றாம் இடத்திலும் உள்ளன.

இந்திய பருத்தி மார்க்கெட்டில் இருந்து 80 லட்சம் பேல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்துள்ளது. ஒரு குவிண்டாலுக்கு 3500 ரூபாய் முதல் நான்காயிரம் ரூபாய் வரை விலை கிடைத்ததால், விவசாயிகளுக்கு நல்ல லாபமும் கிடைத்துள்ளது. பருத்தி குறைந்தபட்ச கொள்முதல் விலை குவிண்டாலுக்கு மூன்றாயிரம் ரூபாயாக அரசு நிர்ணயித்து உள்ளதால் பருத்தி விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை.

**கோடை மழையால் விதைப்பு: பணி மும்முரம்**

தேவாரம்:தேவாரம் பகுதியில் பெய்த கோடை மழையால் மானாவாரி நிலங்களில் விதைப்பு பணி மும்முரமாக நடந்து வருகிறது.கோம்பை, பண்ணைப் புரம், தேவாரம், தம்மிநாயக்கன்பட்டி ஆகிய பகுதியில் இரண்டாயிரம் ஏக்கர் பரப்பளவில் மானாவாரி சாகுபடி நடக்கிறது. இந்த ஆண்டு கோடை மழை தாமதமானதால் சித்திரைபட்ட விதைப்பு கேள்விக்குறியானது.

இந்நிலையில் கடந்த வாரத்தில் தொடர்ந்து இரண்டு நாட் கள் கோடை மழை பெய்தது. இந்த மழையை பயன் படுத்தி விவசாயிகள் உழவுப் பணிகளை மேற் கொண்டனர். இந்த வார துவக்கத்தில் பெய்த கன மழையால் விதைப்பு பணி மும்முரமாக நடந்துவருகிறது.விவசாயிகள் கூறுகையில், கோடை மழை தாமதமானாலும் கன மழையாக பெய்தது. பெரு விவசாயிகள் நிலக்கடலை விதைப் பிற்கு இயந்திர விதைப் பானை பயன் படுத்துகின்றனர். சிறு விவசாயிகள் ஏர் மாடு உதவியுடன் விதைப் பில் ஈடுபட்டு வருகின்றனர். ஏர் மாடுகளுக்கு கிராக் கியாக உள்ளதால் விதைப் பில் தாமதம் ஏற்படுகிறது. அடுத்து ஆனியில் சாரல் மழை கிடைத்தால் போதும், முழு பலனையும் பெறலாம் என்றார்.

**மரம் வளர்க்க விரும்பும் விவசாயிகள் கவனத்திற்கு**

தேனி:மரம் வளர்க்க விரும்பும் தனியார்களுக்கு வனத் துறை அரசு செலவிலேயே மரம் நட்டு வழங்குகிறது. வனத்துறை சார்பில் தேனி மாவட்டத்தில் வருஷநாடு மண்வள பாதுகாப்பு கோட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் தனியார் நிலங்களில் மரம் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.இத்திட்டத்தின் கீழ் ஒரு ஏக்கர் பட்டா உள்ள விவசாயிகளை தேர்வு செய்து அவர்களின் தேவைக்கு ஏற்ப தேக்கு, சவுக்கு, இலவு மர வகைகளை சேர்ந்த 500 நாற்றுகள் அரசு செலவிலேயே நடவு செய்யப்படுகிறது. நல்ல முறையில் நாற்றுகளை வளர்க்கும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் ஆண்டு தோறும் 30 லட்சம் ரூபாய் வரை செலவிடப்படுகிறது. நிலம் உள்ள விவசாயிகள் தேனி பங்களா மேடு பகுதியில் உள்ள வருஷநாடு மண் வள பாதுகாப்பு அலுவலகத்தை அணுகலாம்.இதேபோல் நிலத்தடி நீர் செறிவு திட்டத்தில் வருஷநாடு, வராகநதி, கண்டமனூர், சுத்தகங்கை, கோடாங்கிபட்டி, சின்னமனூர் நீர் பிடிப்பு பகுதிகளில் வனத்துறைக்கு உட் பட்ட ஓடைகள் கண்டறியப்பட்டு மண் அரிமானத்தை தடுக்கவும், நீர் பிடிப்பு பகுதிகளுக்கு அருகில் உள்ள விளைநிலங்களில் கிணறுகளின் நீர் வள ஆதாரத்தை பெருக்கவும், வெற்றுக்கல் தடுப்பணைகள், சிமென்ட் தடுப்பணைகள், சமதளக்குழிகள், கசிவுநீர் குட்டைகள் கட்டப்பட்டு வருகிறது.

**காடு வளர்ப்பு திட்டத்தால் நிலத்தடி நீர் மட்டம் உயர்வு**

தேனி:அண்ணா கிழக்கு காலனியில் காடுவளர்ப்பு திட் டம் அமல்படுத்தப் பட்டுள்ளதால், வனவிலங்குகள் வேட்டையாடுவது தடுக்கப்பட்டு, நிலத் தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. தேசிய காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் கன்னிசேர்வை பட்டியில் 100 ஹெக்டேர் வனநிலத்தில் நெருப்பினால் பாதிக்கப்படாத ஆவி, வெப்பாலை, நெல்லி மரக்கன்றுகளும், வாகை, கடுக்கான், நெய்க் கொட்டான், தானி, வேங் கை மரங்களும், மூங்கில், புரசு, வேம்பு போன்ற மரங்களும் நடப் பட்டுள்ளன.

இந்த வனநிலத்தில் 15 சதவீதம் மட்டுமே மரங்கள் இருந்தன. மீதம் உள்ள 85 சதவீத நிலத்தில் பத்தாயிரம் மரங்கள் வளர்க்கப்பட்டன.நடவு செய்தல், நாற்றங் கால் தயாரித்தல், குழிவெட்டுதல், களை வெட்டுதல் போன்ற பணிகளுக்கு வனக்கிராம பொதுமக்களே பயன்படுத்தப்பட்டனர். ஒவ் வொரு நாற்றுக்கும் அரைவட்ட கரைகள் அமைக்கப் பட்டன. நீர்தேக்க குழிகள், தடுப் பணைகள் கட்டப்பட்டு நீர் பிடிப்பு பகுதியில் மழைநீர் சேகரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் பலனாக இந்த மலைப்பகுதியில் தீ விபத்து ஏற்படவில்லை. இங்கு கட்டப்பட்ட தடுப் பணைகளால் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

**அதிக மகசூல் பெற மண் மாதிரி எடுங்க : வேளாண் உதவி இயக்குனர் 'அட்வைஸ்'**

தொட்டியம் : மண்மாதிரி எடுத்து விவசாயிகள் நல்ல மகசூல் பெற்று பயனடைய வேண்டும் என்று தொட்டியம் வேளாண் உதவி இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தொட்டியம், காட்டுப்புத்தூர், ஏலூர்பட்டி ஆகிய பகுதிகளுக்குட்பட்ட விவசாயிகள் தங்களது நிலத்தின் மண்ணின் தன்மை, தழை, மணி, சாம்பல் சத்துக்கள், நுண்ணூட்ட சத்துக்களின் அளவை அறிந்திடவும், தேவைக்கேற்ப உரமிட்டு உரச்செலவை குறைத்திடவும், மண்ணின் தன்மைக்கேற்ப பயிர்களை தேர்ந்தெடுக்கவும், நிலத்திற்கு இடும் உரம் பயிருக்கு முழுமையாக கிடைத்திடவும் மண் மாதிரி செய்வது மிகவும் அவசியமாகும்.

வயலில் தரிசாக இருக்கும் போதும் மண்ணின் வளம், தன்மை ஆகியவற்றை தெரிந்து கொள்ள ஏக்கருக்கு குறைந்தது 10 இடங்களில் மண் மாதிரிகளை சேகரிக்க வேண்டும். நெல், கேழ்வரகு, கம்பு, வேர்க்கடலை ஆகியவை பயிரிடும்

நிலங்கள் 'வி' வடிவத்தில் மேல் இருந்து 15 செ.மீ. ஆழத்திலும், பருத்தி, கரும்பு, மிளகாய், வாழை, மரவள்ளி ஆகியவை பயிரிட 22.5 செ.மீ. ஆழத்திலும், தென்னை, மா மற்றும் பழத்தோட்ட பயிர்களுக்கு 30, 60, 90 செ.மீ. ஆழத்திலும் மண் எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு சேகரிக்கப்பட்ட மண் ஈரமாக இருந்தால் சுத்தமான தரை அல்லது காகித விரிப்பில் மண்ணை சீராக பரப்பி 4 சம பாகங்களாக பிரித்து எதிர் எதிர் மூலையில் உள்ள இரு பக்கங்களில் உள்ள மண்ணை நீக்கிவிட்டு அரை கிலோ அளவு கொண்ட மண் மாதிரிக்கு துணி பையில் அல்லது பாலித்தீன் பைகளில் போட்டு தாளில் விபரங்களை பூர்த்தி செய்து மண் ஆய்வு கூடத்திற்கோ அல்லது தொட்டியம் வேளாண் விரிவாக்க மையத்திற்கோ அல்லது வரதராஜபுரம் தொடக்க கூட்டுறவு வங்கியில் உள்ள வேளாண் மையத்திலோ கொடுத்து மண் மாதிரி ஆய்வுக்கட்டணமாக 5 ரூபாயும், நுண்ணூட்ட ஆய்வுக்கட்டணமாக 10 ரூபாயும் செலுத்தி மண்ணில் உள்ள நுண்ணூட்ட சத்துக்களை அறிந்து கொண்டு விவசாயிகள் பயன் பெறலாம். இதன் மூலம் விவசாயிகளுக்கு அதிக மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது.

**284 பாங்க் கிளைகள் மூலம் ரூ.2,037 கோடி கடன் : விவசாய தொழில்களுக்கு ரூ.1,431 கோடி வழங்கல் : கடந்த ஆண்டை விட ரூ.330 கோடி அதிகம்**

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் 2010-11ம் ஆண்டில் 2,037 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட 330 கோடி ரூபாய் அதிகமாகும்.

நெல்லை மாவட்ட பாங்குகளின் ஆய்வு கூட்டம் நெல்லையில் நடந்தது. மாவட்ட முன்னோடி பாங்க் மேலாளர் ஜான் பெலிக்ஸ் பெர்னாண்டோ முன்னிலை வகித்தார். இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் முதுநிலை மண்டல மேலாளர் ரஷீத்கான் வரவேற்றார்.

இதில் 2010-11ம் ஆண்டின் கடன் வழங்கும் திட்ட அறிக்கையை கலெக்டர் ஜெயராமன் வெளியிட்டு பேசியதாவது: மாவட்டத்தில் மொத்த முன்னுரிமை கடனாக 2,307.64 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வணிக பாங்குகள் 1,541.47 கோடி (75.65 சதவீதம்), கிராமப்புற பாங்குகள் 383.55 கோடி (18.82 சதவீதம்), கூட்டுறவு பாங்குகள் மூமல் 112.62 கோடி (5.53 சதவீதம்) வழங்கப்படுகிறது.

இதில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு 1,431.17 கோடி (70.24 சதவீதம்), தொழிற்சாலை மற்றும் இதுசார்ந்த தொழில்களுக்கு 185.30 கோடி (9.09 சதவீதம்), சேவை சார்ந்த தொழில்களுக்கு 421.17 கோடி (20.67 சதவீதம்) வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டை விட 153.81 கோடி ரூபாய் அதிகமாகும்.

மாவட்டத்தில் கிராமப்புறங்களில் 104 கிளைகள், குறு நகரங்களில் 109 கிளைகள் மற்றும் நகரங்களில் 71 கிளைகள் உட்பட மொத்தம் 284 பாங்க் கிளைகள் மூலம் இக்கடன் வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் கோழிப்பண்ணை தொழிலுக்கு 19.70 கோடி, கல்வி கடனாக 93.79 கோடி, வீடு கட்ட 121.24 கோடி, சிறு கன ரக வாகனங்களுக்கு 40 கோடியும் கடன் வழங்கப்பட உள்ளது. விவசாயப் பணிகள் திட்டத்தின் கீழ் நுண்நீர் பாசனம் 29 கோடி, நில சீர்திருத்தம் 17.26 கோடி, விவசாய எந்திர தளவாடங்கள்/டிராக்டர் 71.74 கோடி, தோட்டக்கலை 32 கோடி, இதர விவசாய தேவைகள் 48.97 கோடி, பயிர்க் கடன் 1,139.04 கோடி கடன் வழங்கப்படுகிறது.

பால் உற்பத்தி (கறவை மாடு உற்பத்தி) 60.10 கோடி, செம்மறி/வெள்ளாடு மற்றும் பன்றி வளர்ப்புக்கு 5.69 கோடி, மீன் வளர்ச்சி 1.94 கோடி, பண்ணை காடுகள் 2.29 கோடி, பால் பதனிடுதல்/விளைபொருள் கட்டமைப்புக்கு 3.37 கோடி கடன் வழங்கப்படுகிறது.

தொழிற்சாலைகளுக்கு கைத்தறி 4.43 கோடி, குறுந்தொழில் 5.59 கோடி, கிராமிய தொழில் 6.04 கோடி, கிராமிய கைவினைஞர்கள் 4.29 கோடி, சிறு தொழிற்சாலைகள் 143.47 கோடி, இதர வகைகளுக்கு 21.47 கோடி ரூபாய் கடன் வழங்கப்படுகிறது.

சேவை சார்ந்த தொழில்களுக்கு கன ரக ஊர்தி உரிமையாளர்களுக்கு 40 கோடி, சிறு வியாபாரிகள் 88.60 கோடி, சுய தொழில் செய்வோர் 32.76 கோடி ரூபாய் வழங்கப்பட உள்ளது.

மேலும், சுய உதவி குழுக்களுக்கு நேரடிக் கடன், பொருளாதார கடன், சுழல் நிதி கடன் மற்றும் பஞ்., அளவிலான கூட்டமைப்புகளுக்கு நுண் கடன் 224.64 கோடி கடன் வழங்க திட்டமிடமிப்பட்டுள்ளது. இந்த கடன் இலக்கு மாநில அரசின் வேண்டுகோளான குறைந்த அளவு 148.52 கோடி கடன் இலக்கை விட 76.12 கோடி அதிகமான தொகையாகும்.

மாவட்டத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட கடன் தொகையை அனைத்து பாங்க் கிளைகளும் வழங்க வேண்டும். மேலும், கடந்த ஆண்டில் கடன் வழங்கும் இலக்காக 1,701 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு பாங்க் கிளைகள் மூலமும் வழங்கப்பட்ட இக்கடன் தொகை விபரத்தையும் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார்.

இதில் நபார்டு பாங்க் உதவி பொது மேலாளர் சுரேஷ், மகளிர் திட்ட அலுவலர் முத்துமீனாள், பி.ஆர்.ஓ ரவீந்திரன், ஏ.பி.ஆர்.ஓ நவாஸ்கான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மரக்காணத்தில் உப்பு உற்பத்தி அதிகரிப்பு: விலை திடீர் சரிவு**



மரக்காணம்:மரக்காணத்தில் கடும் வெயில் காரணமாக, உப்பு உற்பத்தி அதிகரித் துள்ளது.தமிழக அளவில் உப்பு உற்பத்தி யில் தூத்துக்குடி முதலிடம் வகிக் கிறது. இதற்கு அடுத்ததாக வேதா ரண்யம் இரண்டாம் இடத்திலும், மரக்காணம் மூன்றாம் இடத்திலும் உள்ளது.விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பகுதியில், ஒவ்வொரு ஆண்டும் இரண்டாயிரம் ஏக்கர் பரப் பளவில் உப்பு உற்பத்தி செய்யப் படுகிறது. இப்பகுதியில் ஆண்டு தோறும் நான்கு லட்சம் டன் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இத் தொழிலில் 6,000 பேர் வேலை செய்து வருகின்றனர்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்கள் மற்றும் ஆந்திரா, கர்நாடகா,கேரளா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் மரக்காணம் பகுதியில் உற்பத்தியான உப்பு விற் பனைக்கு அனுப்பப் படுகிறது.கடந்த இரண்டு

மாதங்களாக கடும் வெயில் காரணமாக உப்பு உற்பத்தி இரு மடங்காக அதிகரித்துள்ளது. கடந்தாண்டு மூட்டை ஒன்று 150 முதல் 200 ரூபாய் வரை விற்பனையானது. இந்த ஆண்டு விலை வீழ்ச்சியடைந்து, மூட்டை ஒன்று, 80 முதல் 60 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

**தேங்காய் பருப்பு ஏலம் ஒத்திவைப்பு**

வெள்ளகோவில்:வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாரந்தோறும் புதன்கிழமை தேங்காய் பருப்பு ஏலம் நடக்கிறது.இந்த வாரம் ரூ.11 லட்சம் மதிப்புள்ள 746 தேங்காய் பருப்பு மூட்டைகள் ஏலத்துக்கு வந்திருந்தன. அம்மூட்டைகளை வணிகர்களுக்கு இறக்க, கூலி உயர்வு கேட்டு தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால், விவசாயிகளின் ஒப்புதலோடு மே 5ம் தேதிக்கு ஏலம் ஒத்திவைக்கப்பட்டது.

**பருத்தி வரத்து குறைவு: ரூ.17 லட்சத்துக்கு ஏலம்**

அவிநாசி:அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த பருத்தி ஏலத்துக்கு 1,200 மூட்டைகள் வரத்தாக இருந்தன. இது, கடந்த வாரத்தை காட்டிலும் ரூ.1,400 மூட்டைகள் குறைவு. வரத்து குறைந்துள்ள நிலையில், அனைத்து ரக பருத்தி விலையும் குறைந்துள்ளது.பருத்தி விலை விபரம் (குவிண்டாலுக்கு) வருமாறு:எல்.ஆர்.ஏ., ரூ.2,600 முதல் ரூ.3,100 வரை, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ரூ.2,800 முதல் ரூ.3,350 வரை, டி.சி.எச்., ரூ.3,600 முதல் ரூ.4,400 வரை, மட்டம் ரூ.1,600 முதல் ரூ.2,000 வரை.அவிநாசி கூட்டுறவு விற்பனை சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறியதாவது:இந்த வாரம், கடந்த வாரத்தை விட வரத்து குறைந் துள்ளது.

விவசாயிகள், தாங்கள் இருப்பு வைத்த பருத்தியை மட்டும் ஏலத்துக்கு கொண்டு வருகின்றனர்.புதிய பருத்தி ஏதும் இல்லாததால், வரத்து குறை கிறது. இந்த வார ஏலத்தில், எல்.ஆர்.ஏ., குவிண் டாலுக்கு ரூ.300, ஆர்.சி.எச்., மற்றும் பென்னி ரகங்கள் ரூ.200, டி.சி.எச்., ரகம் ரூ.350 குறைந்தது.திண்டுக்கல் புதுப்பட்டி, தர்மபுரி பகுதிகளில் இருந்து விவசாயிகள் பருத்தியை கொண்டு வந்திருந் தனர். ரூ.17.15 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.இவ்வாறு, அவர் கூறினார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

---

***நடப்பு பருவத்தில் காபி உற்பத்தி 10% அதிகரிக்கும்***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*பெங்களூர்*
*நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) நம் நாட்டில் காபி உற்பத்தி 10 சதவீதம் உயர்ந்து 2.90 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*
*ஏற்றுமதி*
*நடப்பு பருவத்தில் இதுவரை (அக்டோபர்–ஏப்ரல்) காபி ஏற்றுமதி 29 சதவீதம் உயர்ந்துள்ளது. முழு பருவத்தில் ஏற்றுமதியின் தற்போதைய வேகம் குறைந்து, 15 முதல் 20 சதவீதமே அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் 70 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.*
*நடப்பு பருவத்தில் ஏற்றுமதியின் வளர்ச்சி வேகம் குறையும் நிலை உள்ளது. இது, வியட்நாம், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு சாதகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. உலக அளவில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் அதிக அளவில் காபியை இறக்குமதி செய்து வருகின்றன. இந்த நாடுகளுக்கான ஏற்றுமதியில், நடப்பு பருவத்தில் இந்தியாவின் பங்களிப்பு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச அளவில் காபி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்களிப்பு 3.5 சதவீத அளவிற்கே உள்ளது.*
*ஆசியாவில் காபி உற்பத்தியில் நம் நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் ஆறாவது இடத்தில்*

*உள்ளது. உலகின் மொத்த காபி உற்பத்தியில் இந்தியாவின் பங்களிப்பு சுமார் 4 சதவீதமாக உள்ளது. உள்நாட்டில் தென் மாநிலங்களில்தான் அதிகளவில் காபி உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. நம் நாட்டில் லட்சக்கணக்கான காபி தோட்டங்கள் உள்ளன. மொத்தம் 9 லட்சம் ஏக்கர் பரப்பளவில் காபி உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது.*

*கர்நாடக மாநிலம்*

*இந்தியாவில் காபி உற்பத்தியில் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் இம்மாநிலத்தின் பங்களிப்பு சுமார் 70 சதவீதமாகும். இங்கு குடகு, சிக்மகளூர் மற்றும் ஹசன் ஆகிய பகுதிகள் அதிகளவில் காபி உற்பத்தி ஆகிறது. இந்திய காபி உற்பத்தி துறை சுமார் 6 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது.*

***வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 2.27 கோடி டன்னாக உயரும்***

*வரும் 2010–11–ஆண்டு சர்க்கரை பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) நாட்டின் சர்க்கரை உற்பத்தி, நடப்பு சர்க்கரை பருவத்தை (2009–10) விட 28 சதவீதம் அதிகரித்து 2.27 கோடி டன்னாக உயரும் என அமெரிக்க வேளாண் துறை மதிப்பீடு செய்துள்ளது.*

*கரும்பு உற்பத்தி*

*கடந்த இரண்டு ஆண்டுகளாக, உள்நாட்டில் சர்க்கரை உற்பத்தி பாதிப்புக்குள்ளாகி உள்ளது. கரும்பு அதிக அளவில் பயிரிடப்படும் மாநிலங்களில் உற்பத்தி குறைந்து போனதையடுத்து, சர்க்கரை உற்பத்தியும் குறைந்து போனது.*

*உலக அளவில், சர்க்கரை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. அதேசமயம், சர்க்கரை பயன்பாட்டில் முதல் இடத்தில் உள்ளது. நடப்பு சர்க்கரை பருவத்தில், இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி 1.77 கோடி டன்னாக இருக்கும். இது, இதற்கும் முந்தைய பருவத்தில் 1.45 கோடி டன்னாக இருந்தது என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.*

*விலை உயராது*

*வரும் சர்க்கரை பருவத்தில், இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி அதிகரிக்கும் என்ற மதிப்பீட்டால், உள்நாட்டில் சர்க்கரையின் விலை உயராது என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், சர்க்கரை இறக்குமதியையும் வெகுவாக குறைத்துக் கொள்ள முடியும் என இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.*

*உள்நாட்டில், சர்க்கரைக்கான தேவைப்பாடு 2.30 கோடி டன் என்ற அளவில் உள்ளது. ஆனால், தேவைப்பாட்டை ஈடு செய்யும் அளவிற்கு உற்பத்தி இல்லாததால், மத்திய அரசு இதனை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. உற்பத்தி குறைந்ததால், இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் ஒரு கிலோ சர்க்கரையின் விலை ரூ.50–ஆக (ஒரு கிலோ) அதிகரித்திருந்தது. தற்போது இதன் விலை ரூ.32–34 என்ற அளவில் உள்ளது.*

*ஏற்றத் தாழ்வுகள்*

*இந்தியாவில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில் 6–8 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏற்ற, தாழ்வுகள் ஏற்படுகிறது. அதாவது, நான்கு ஆண்டுகளுக்கு சர்க்கரை உற்பத்தி அதிகரித்திருந்தால், அடுத்த 2–3 ஆண்டுகளுக்கு சர்க்கரை உற்பத்தி குறைந்து விடுகிறது என அமெரிக்க வேளாண் துறை மேலும் தெரிவித்துள்ளது.*

*வரும் 2010–11 சர்க்கரை பருவத்தில், மகாராஷ்டிரா மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி 74 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு பருவத்தில் இம்மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி 63 லட்சம் டன்னாக இருக்கும்.*

*இதேபோன்று, உத்தரபிரதேச மாநிலத்தில், நடப்பு சர்க்கரை பருவத்தில் 52 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகும் என்றும், வரும் பருவத்தில் 65 லட்சம் டன்னாக உயரும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.*

# அரியவகை 'பூ'



திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் உள்ள கண்ணம்மாள் பள்ளி வளாகத்தில் பல வகையான பூச்செடிகள், மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதில் யக்கர கார்டிபோலியோ என்ற மருத்துவ குணம் கொண்ட செடி அழகாக பூத்துள்ளது. இந்த அரிய வகைப்பூ 7 வருடங்களுக்கு ஒரு முறை தான் பூக்கும் என்று கூறப்படுகிறது. இந்த அரிய வகை பூக்களை மாணவ-மாணவிகள், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆர்வமாக பார்த்து செல்கிறார்கள்.